Journal of Valartamil, eISSN 2716-5507
Volume 6, No.1, 2025, (1-7)

# புளூம் வகைப்பாடு அணுகுமுறை வழி படிவம் 1 மாணவர்களிடையே சரளமாக விவரித்துக் கூறும் ஆற்றலை மேம்படுத்தும் ‘தமிழ் டாக்’ செயலி; ஓர் ஆய்வு

# A Study on Enhancing Fluency in Descriptive Speech Among Form 1 Students through 'TamilTalk' App Using Bloom's Taxonomy Approach

**Gohkkila Subramaniam**
Faculty of Languages and Communication
Universiti Pendidikan Sultan Idris, 35900 Tanjong Malim, Perak, Malaysia

d20211100676@siswa.upsi.edu.my

**Corresponding author: Gohkkila Subramaniam*

**Received:** 05 Oct 2024; **Revised:** 04 Apr 2025; **Accepted:** 15 Apr 2025; **Published:** 25 April 2025

**To cite this article (APA):** Subramaniam, G. . (2025). புளூம் வகைப்பாடு அணுகுமுறை வழி படிவம் 1 மாணவர்களிடையே சரளமாக விவரித்துக் கூறும் ஆற்றலை மேம்படுத்தும் ‘தமிழ் டாக்’ செயலி; ஓர் ஆய்வு: A Study on Enhancing Fluency in Descriptive Speech Among Form 1 Students through ’TamilTalk’ App Using Bloom’s Taxonomy Approach. *Journal of Valartamil*, *6*(1), 1-7. https://doi.org/10.37134/jvt.vol6.1.1.2025

**Abstract:** The aim of this research is to evaluate the effectiveness of the ‘TamilTalk’ APP in engaging Form 1 students to descriptively talk in a more fluent manner. Activities were conducted based on Bloom's Taxonomy Levels 2, 3, and 5 – Understand, Apply and Evaluate. The most important target of the study was to increase students’ understanding of how to describe a point given through this app and check how clearly and effectively they express themselves. Students interactively self-practice through the videos, notes, exercises, students’ scores and teachers’ constructive feedback that foster an understanding of the most important language features of descriptors and their practical usage during speaking, as well as self and peer evaluation. Such an app that leverages Bloom’s higher order thinking skills has the potential to develop critical thinking, articulation and cognitive skills and advances the ability of students to communicate clearly and confidently. Pre-post speaking test results illustrated that students demonstrated improvement in the organization and delivery of the descriptive speech and self-assessment. These findings reveal the importance of combining Bloom’s Taxonomy and technological tools in improving speech fluency and language acquisition but more importantly, it determines how communication skills can foster young learners through the use of technology over conventional teaching methods.

**Keywords:** ‘TamilTalk’ APP, Form 1 students, Bloom's Taxonomy, speaking, Bloom’s Taxonomy and technological

**ப்ளூம் வகைப்பாடு அணுகுமுறை வழி படிவம் 1 மாணவர்களிடையே சரளமாக விவரித்துக் கூறும் ஆற்றலை மேம்படுத்தும் 'தமிழ் டாக்' செயலி; ஓர்**

**சுருக்கம்:** இந்த ஆராய்ச்சியின் நோக்கம், படிவம் 1 மாணவர்களை மிகவும் சரளமாக விளக்கமாகப் பேச ஈடுபடுத்துவதில் 'தமிழ் பேச்சு' APP இன் செயல்திறனை மதிப்பிடுவதாகும். ப்ளூமின் வகைபிரித்தல் நிலைகள் 2, 3 மற்றும் 5 - புரிந்து கொள்ளுங்கள், பயன்படுத்தவும் மற்றும் மதிப்பிடவும் - அடிப்படையில் செயல்பாடுகள் நடத்தப்பட்டன. இந்த பயன்பாட்டின் மூலம் கொடுக்கப்பட்ட ஒரு புள்ளியை எவ்வாறு விவரிப்பது என்பது குறித்த மாணவர்களின் புரிதலை அதிகரிப்பதும், அவர்கள் தங்களை எவ்வளவு தெளிவாகவும் திறம்படவும் வெளிப்படுத்துகிறார்கள் என்பதைச் சரிபார்ப்பதும் ஆய்வின் மிக முக்கியமான இலக்காகும். விளக்கங்களின் மிக முக்கியமான மொழி அம்சங்கள் மற்றும் பேசும் போது அவற்றின் நடைமுறை பயன்பாடு, அத்துடன் சுய மற்றும் சகா மதிப்பீடு பற்றிய புரிதலை வளர்க்கும் வீடியோக்கள், குறிப்புகள், பயிற்சிகள், மாணவர்களின் மதிப்பெண்கள் மற்றும் ஆசிரியர்களின் ஆக்கபூர்வமான கருத்துகள் மூலம் மாணவர்கள் ஊடாடும் வகையில் சுய பயிற்சி செய்கிறார்கள். ப்ளூமின் உயர் வரிசை சிந்தனைத் திறன்களைப் பயன்படுத்தும் இத்தகைய பயன்பாடு, விமர்சன சிந்தனை, வெளிப்பாடு மற்றும் அறிவாற்றல் திறன்களை வளர்க்கும் திறனைக் கொண்டுள்ளது மற்றும் மாணவர்கள் தெளிவாகவும் நம்பிக்கையுடனும் தொடர்பு கொள்ளும் திறனை மேம்படுத்துகிறது. முன்-போஸ்ட் பேச்சுத் தேர்வு முடிவுகள், மாணவர்கள் விளக்கமான பேச்சு மற்றும் சுய மதிப்பீட்டின் அமைப்பு மற்றும் விநியோகத்தில் முன்னேற்றத்தைக் காட்டியுள்ளனர் என்பதை விளக்குகின்றன. பேச்சு சரளத்தையும் மொழி கையகப்படுத்தலையும் மேம்படுத்துவதில் ப்ளூமின் வகைபிரித்தல் மற்றும் தொழில்நுட்ப கருவிகளை இணைப்பதன் முக்கியத்துவத்தை இந்த கண்டுபிடிப்புகள் வெளிப்படுத்துகின்றன, ஆனால் மிக முக்கியமாக, வழக்கமான கற்பித்தல் முறைகளை விட தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலம் இளம் கற்பவர்களை எவ்வாறு தகவல் தொடர்பு திறன் வளர்க்க முடியும் என்பதை இது தீர்மானிக்கிறது.

**முக்கிய வார்த்தைகள்:** 'தமிழ் பேச்சு' APP, படிவம் 1 மாணவர்கள், ப்ளூமின் வகைபிரித்தல், பேசுதல், ப்ளூமின் வகைபிரித்தல் மற்றும் தொழில்நுட்பம்

## முன்னுரை

பேச்சு திறன் ஆக்கத் திறன்களில் ஒன்றாகும். பேச்சு திறன் என்பது பிறரிடம் திறம்பட தொடர்புக் கொள்ள அனுமதிக்கும் ஒரு திறனாகும். அவை வாய்மொழியாகவும் கேட்போர் புரிந்துக்கொள்ளும் வகையிலும் கருத்துகளைத் தெரிவிக்கும் திறனை நமக்குத் தருகின்றன. பேச்சு திறன் என நாம் எடுத்துக்கொண்டால் வரையறுத்துக் கூறுதல் (Definition Speech), செயல் மூலம் கூறுதல், (Demonstrate Speech), விவரித்துக் கூறுதல் (Descriptive Speech) என பலவகை உள்ளன. அவ்வகையில் விவரித்துக் கூறுதல் என்பது மிக முக்கிய கூறாகக் கருதப்படுகிறது. விவரித்துக் கூறும் ஆற்றல் எனப்படுவது எண்ணங்களைக், கருத்துகளை அல்லது ஒரு தலைப்பின் நிலையை விளக்கும் ஒரு முக்கிய தகவல் பேச்சாகும்.

## ஆய்வுப் பின்னணி

மலேசியாவில் கல்விக் கொள்கைக்கு ஏற்ப இடைநிலைப்பள்ளியில் தமிழ்மொழி ஒரு பாடமாகக் கற்பிக்கப்படுகிறது. தமிழ்மொழியின் கே.எஸ்.எஸ்.எம் கலைத்திட்டத்தின் வழி மாணவர்கள் அடைய வேண்டிய நோக்கங்கள் நிறைய உள்ளன. இக்கலைத்திட்டம், கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து, இலக்கணம் மற்றும் செய்யுள் மொழியணி ஆகிய மொழித்திறன்களை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மொழித்திறனுக்கும் உள்ளடக்கத் திறன் மற்றும் கற்றல் திறனும் வரையறுக்கப்பட்டுள்ளது.

அவ்வகையில் கற்றல் கற்பித்தலில் பேச்சுத் திறன் மிக முக்கியமான ஒன்றாகும். சொற்களைப் பயன்படுத்தித் தகவல் தெரிவிப்பதில் எழுத்து மற்றும் பேச்சு என இருவகை இருந்தாலும், தகவல் பரிமாற்றத்தில் முக்கால் பகுதி பேச்சு மூலம்தான் நடைபெறுகிறது. (Murugesan. 2019). பேச்சுத் திறன் வழி ஒருவர் வாழ்வில் கிடைக்கும் தகவல்களைச் சீர்தூக்கிப் பார்த்து வாழ்க்கைச் சூழலுக்கு ஏற்ப நல்ல மொழியில் அதனை வெளியிடுவர்.

தமிழ்மொழி கலைத்திட்டத்தின் அடிப்படையில், பேச்சுத் திறன் கீழ் நிறைய உள்ளடக்கத் திறன் வகுக்கப்பட்டுள்ளது. அவற்றில், விவரித்துக் கூறுதல் எனும் ஒரு கூறும் அடங்கியுள்ளது. பேச்சுத் திறனில் விவரித்துக் கூறுதல் என்பது ஒரு குறிப்பிட்ட விஷயத்தை மிக விரிவாகவும் தெளிவாகவும் விளக்கிக் கூறுவதைக் குறிக்கிறது. இவை பெரும்பாலும் ஒரு பொருள், ஒரு செயல்பாடு, ஒரு நிகழ்வு, அல்லது ஒரு சூழலைப் பற்றிய முழுமையான விளக்கத்தை வழங்குவதாகும்.

ஒரு நாளைக்கு ஒருவர் அன்றாட வாழ்வில் விவரித்துக் கூறுதல் என்பது கல்வி, வணிகம், மற்றும் தனிப்பட்ட வாழ்க்கை உள்ளிட்ட பல்வேறு சூழ்நிலைகளில் முக்கியமான திறன் ஆகும். அவ்வகையில், இன்றைய சூழ்நிலையில் விவரித்துக் கூறும் ஆற்றல் குறைவாக உள்ளது. விவரித்துக் கூறும் ஆற்றல் இருப்பதன் மூலம் மாணவர்கள் கற்றல் நடவடிக்கைகளில் தீவிரமாக செயல்பட இயலும்.

படிவம் 1 தமிழ்மொழி கலைத்திட்டத்தைப் பார்த்தோமானால், கேட்டல் பேச்சில் விவரித்துக் கூறும் எனும் உள்ளடக்கத் தரம் உள்ளது. அதற்கான முதல் கற்றல் தரமானது படித்தவற்றை விவரித்துக் கூறுதல் என்பதாகும். அடுத்ததாக, பார்த்த நிகழ்சியை விவரித்துக் கூறுதல் என்பதாகும். இன்றைய நிலையில், படிவம் 1 மாணவர்கள் விவரித்துக் கூறுவதில் மிகவும் பின்தங்கியே உள்ளனர். தொடக்கப்பள்ளியிலே மாணவர்களுக்கு விவரித்துக் கூறும் சார்ந்த பயிற்சிகளை ஆசிரியர்கள் குறைவாகவே மேற்கொள்வதால் இடைநிலைப்பள்ளியில் எல்லா படிவங்களில் இந்திய மாணவர்கள் அவற்றில் பின்தங்கியே காணப்படுகின்றனர். இடைநிலைப்பள்ளியில் அதனைக் கற்பித்தாலும் மாணவர்கள் அதனைச் சுலபமாகக் கற்றுக் கொள்வதில் சிக்கலை எதிர்நோக்குகின்றனர். மாணவர்களுக்குப் பேச்சு திறன் வளர அவர்களைப் பேச்சு செயலில் ஈடுபடச் செய்து, நல்ல முறையில்

பயிற்சியளிக்க வேண்டும். மாணவர்களைப் பேசச் செய்து, அவர்களின் பேச்சில் இருக்க வேண்டிய அழுத்தம், திருத்தம், தெளிவு, விரைவு, உயிர்ப்பு ஆகியவற்றை ஆசிரியர்கள் கவனிக்க வேண்டும். எதிர்கால தலைவர்களான மாணவர்களுக்குத் திறமையான தரமான பேச்சு பயிற்சி அளிப்பது ஆசிரியர்தம் கடமையாகும்.

அவ்வகையில் செயலி பயன்பாட்டின் வழி மாணவர்களுக்கு விவரித்துக் கூறும் ஆற்றலை மேம்படுத்துவது ஆய்வாளரின் எண்ணமாகும். இன்றைய 21-ஆம் நூற்றாண்டு கற்பித்தலில் செயலி பயன்பாடு மாணவர்களுக்கு நிச்சயமாகப் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும். இச்செயலியானது சுயமாக உருவாக்கப்பட்டு அவற்றுள் விவரித்துக் கூறுவதன் கூறுகளை உள்ளடக்கி அமைக்கப்பட்டது ஆகும். இதனை Bloom Taxonomy கோட்பாட்டின் வழி மாணவர்களுக்கு ஆய்வாளரால் கொண்டு சேர்க்கப்படுகிறது. இந்த கோட்பாடு கற்றல் மற்றும் மதிப்பீட்டு முறைகள் குறித்து ஆசிரியர்கள் உரையாடவும் பரிமாறிக்கொள்வதற்கான பொதுவான மொழியை வழங்க உருவாக்கப்பட்டது. புளூமின் வகைப்பாடு (Bloom's taxonomy) கல்விகற்றல் நோக்கங்களைக் குறிப்பிட்ட நிலைகளாக வகைப்படுத்தப் பயன்படும் ஆறு படிநிலை கொண்ட மாதிரிகளின் தொகுப்பாகும்.

## ஆய்வுச் சிக்கல்

பேச்சுத் திறனில் இடைநிலைப்பள்ளி மாணவர்கள் தமிழ் மொழி பயின்றாலும் அவற்றில் பின்தங்கியே உள்ளனர். மாணவர்கள் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளவும், எண்ணங்களை வெளிப்படுத்தவும், ஒருவருக்கொருவர் தொடர்புக் கொள்ள மிகவும் கடினமாக உள்ளது.

அவ்வகையில் மாணவர்கள் விவரித்துக் கூறுவதில் பல சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர். முதலில், ஆங்கில கலப்பு இல்லாமல் சிறந்த தமிழ்மொழியில் பேசுவதிலேயே போராட்டமாக உள்ளது. ஆங்கில ஆட்சியினால் ஏற்பட்ட விளைவாக இந்த போராட்டம் மாணவர்களிடையே ஏற்படுகிறது. காரணம் பெரும்பாலும் ஆங்கிலம் பயன்படுத்துவதுதான் தனக்கு மதிப்பு என எண்ணுவதால் இச்சிக்கல் ஏற்படுகிறது. இதன் சான்றாக, விகடன் எனும் நாளிதழில் இதனைச் சார்ந்து காண முடிகிறது. அதாவது, ஆங்கிலம் எல்லாத் துறைகளிலும் பயன்படுத்துவதால் தாய்மொழியில் உள்ள புலமை கரைந்து போகிறது. பெற்றோர்களும் தங்களது பிள்ளைகளை ஆங்கிலத்தில் கல்வி கற்க முற்படுத்துகிறார்கள். பிள்ளைகளும் தங்களது தாய்மொழியையும், ஆங்கிலத்தையும் குழப்பிக்கொண்டு கல்வி கற்கின்றனர். இவ்வாறு கற்கும்போது ரெண்டுகெட்டானாக படித்து செய்வது அறியாது பிறமொழியைத் தேர்ந்தெடுக்கிறார்கள். அதிலும் புலமை பெறுகிறார்களா எனக் கேட்டால், இல்லை. இப்படிச் சிறு வயது முதலே அவர்களை ஆங்கிலம் படிக்க உந்துவதால் அவர்களால் ஆங்கிலம்,

தாய்மொழி, புறமொழி என எந்தவொரு மொழியையும் முழுமையாகப் பயில முடியாமல் போகிறது. (விகடன், 2019).

மேலும், மாணவர்கள் தன் மூளை செயல்படும் விதத்தில் பிரச்சனைகளை எதிர்நோக்குகின்றனர். மூளையின் சில குறிப்பிட்ட பாகங்கள் மொழி இயங்குவதற்கு, தேர்ச்சி பெற்றதாகக் கருதப்படுகிறது. பேச்சு மற்றும் மொழி இயக்கம் மூளையின் இடது பக்கப் பகுதியிலேயே நடைப்பெறுகின்றது என்பது மூளைச் சிதைவின் ஆய்வுகள் நமக்கு எடுத்துரைக்கின்றன. மனிதனின் எந்தவொரு செயலும் மூளையின் செயலாக்கத்தை அடிப்படையாகக் கொண்டே அமைகிறது. அவ்வகையில், மூளைச் செயல்படும் விதத்தில் பிரச்சனை என பார்த்தோமானால், தெளிவாக உச்சரிக்க இயலாமை, ஒலிகளை இணைத்து வார்த்தை உருவாக்க இயலாமை, பேச்சுத் திணறல்கள், திக்குதல் போன்றவையாகும்.

அதனைத் தவிர்த்து, மாணவர்கள் தமிழ்மொழியின் சொற்களைத் திறம்படக் கற்றுக் கொள்வதில் மற்றும் செம்மையான வாக்கிய அமைப்போடு பேசுவதிலும் சிக்கலை எதிர்நோக்குகின்றனர். அதாவது மாணவர்கள் கூற வரும் கருத்தானது தெளிவு இல்லாமல் உள்ளது. மாணவர்கள் சொற்களை மாற்றிக் கூறுதல், புரிதல் திறன் இல்லாமை, இலக்கணக் குறைகள் போன்ற சிக்கலை எதிர்நோக்குகின்றனர். மேலும், சொற்களஞ்சியம் அறியாமல் இருக்கின்றனர். அதாவது கூற வரும் கருத்திற்குச் சரியான சொற்களைப் பயன்படுத்த மாணவர்களுக்குத் தெரியவில்லை.

ஆக, இம்மாதிரியான சிக்கலைக் களைவதற்கு Bloom Taxonomy அணுகுமுறை வழி படிவம் 1 மாணவர்களிடையே சரளமாக விவரித்துக் கூறும் ஆற்றலை மேம்படுத்தும் ‘தமிழ் டாக்’ (TamilTalk) செயலி எனும் ஓர் ஆய்வு ஆய்வாளர் மேற்கொண்டுள்ளார்.

## ஆய்வு நோக்கம்

இவ்வாய்வு மூன்று நோக்கங்களைக் கொண்டுள்ளது. அவை:

I. சரளமாக விவரித்துக் கூறும் சிக்கலை மாணவர்களிடையே கண்டறிதல்.
2. படிவம் 1 மாணவர்களிடையே சரளமாக விவரித்துக் கூறும் ஆற்றலை மேம்படுத்தும் ‘தமிழ் டாக்’ செயலியை உருவாக்குதல்.
3. படிவம் 1 மாணவர்களிடையே சரளமாக விவரித்துக் கூறும் ஆற்றலை ‘தமிழ் டாக்’ செயலி மூலம் மேம்படுத்துதல்.

## ஆய்வு கருவி

ஆய்வுக் கருவி என்பது ஆய்வு நோக்கத்தை அடைய சேகரிக்கும் விவரங்களைப் பெறுவதற்கான கருவியாகும். முன்னறி, பின்னறித் தேர்வு, கருத்தறிவினா நிரல், உற்று நோக்குதல் போன்ற ஆய்வுக் கருவிகளை இந்த ஆய்விற்குப் பயன்படுத்தப்பட்டது. இவை அனைத்தும் ஆய்வாளரால் சுயமாகத் தயாரிக்கப்பட்டு, அவற்றின் நம்பகத்தன்மையை உறுதி செய்ய விரிவுரையாளரால் சரிபார்க்கப்படும். மேலும், தமிழ் டாக் செயலியும் ஆய்வாளர் பயன்படுத்தியுள்ளார்.

## வினா

வினா 1: 1. சரளமாக விவரித்துக் கூறுவதில் மாணவர்களிடையே ஏற்படும் சிக்கல்கள் யாவை?

இப்பாகத்தில் மொத்தம் 5 கேள்விகள் கேட்கப்பட்டிருந்தது. இந்த 5 வினாக்களுக்கும் அனைத்து மாணவர்கள் ஆம் என்ற தேர்வை அதிகமாக தேர்ந்தெடுத்துள்ளனர். இந்த வினாக்களின் மூலம் மாணவர்கள் விவரித்துக் கூறுவதன் புரிதல் எந்த அளவிற்கு இருக்கிறது என்பதனை அறிந்துக் கொள்ள முடிந்தது.

முதலில், கருத்துகளை யோசிப்பது சரளமாக விவரித்துக் கூறுவதில் முக்கியமான சிக்கலாக கருதுகிறீர்களா? எனும் முதல் கேள்விக்கு 20 மாணவர்கள் அதாவது 66.67% ஆம் என்றும் 10 மாணவர்கள் அதாவது 33.33% இல்லை என்றும் தேர்வுசெய்துள்ளனர். இதன் மூலம், பெரும்பாலான மாணவர்கள் ஒன்றினை விவரித்துக் கூறுவதற்குக் கருத்துகளை யோசிப்பதில்தான் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர் என தெரியவருகிறது.

அதனையடுத்து, சரளமாக விவரித்துக் கூறும்பொழுது வாக்கிய அமைப்பில் தடுமாற்றம் அடைகிறிர்களா? எனும் கேள்விக்கு 30 மாணவர்களும் அதாவது 100% ஆம் எனும் விடையைத் தேர்வு செய்துள்ளனர். இதன் மூலம் விரைவாக பல கருத்துகளை ஒரே நேரத்தில் விவரிக்க முயற்சிக்கும்பொழுது மாணவர்களால் வாக்கியங்களைச் சரியாக அமைக்க முடியாமல் போகிறது என தெரிய வருகிறது.

தொடர்ந்து, கருத்துகளைத் தெளிவாக வெளிப்படுத்த பயம் உள்ளதா? எனும் கேள்விக்கு 17 மாணவர்கள் அதாவது 56.67% ஆம் என்றும் 13 மாணவர்கள் 43.33% இல்லை என்றும் தேர்வு செய்துள்ளனர். இதன் மூலம் பெரும்பாலான மாணவர்கள் பேசும்போது ஏதேனும் தவறு செய்துவிடுவேனா என்ற பயமும், கூறிய கருத்து தவறாகினால் மற்ற மாணவர்கள் என்ன நினைப்பார்கள் என பயமும் அவர்களுக்கு சரளமாக விவரித்துக் கூற சிக்கலாக அமைகிறது என கண்டறிய

முடிகிறது. ஆக, இதன் மூலம் ஆய்வாளர் எம்மாதிரியான சிக்கலை அடைகின்றனர் என்பதையும், விவரித்துக் கூறுவதற்கான புரிதல் எவ்வாறு இருக்கின்றது என்பதையும் அறிய முடிந்தது.

## முடிவு

இந்த ஆய்வின் முக்கிய நோக்கமானது படிவம் 1 மாணவர்களின் விவரித்துக் கூறும் சிக்கலை கண்டறிந்து அதனை தமிழ் டாக் செயலி மூலம் மேம்படுத்துதல் ஆகும். ஆய்வாளர் செயலியில் பலவகையான அம்சங்களை உருவாக்கி மாணவர்களுக்கு பேச்சு சார்ந்த நடவடிக்கைகளை மேற்கொண்டார். இதனால், மாணவர்களின் விவரித்துக் கூறும் தேர்வின் அடைவுநிலை மேம்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம், மாணவர்களுக்குத் தமிழ் டாக் செயலி வழி கற்க ஆர்வம் கொண்டுள்ளனர் என அறிய முடிகிறது. பேச்சு திறன் குறித்து பல்வேறு மேற்கோள் கருத்துகளை இந்த ஆய்விலிருந்து எடுத்துக்கொண்டு எதிர்கால ஆய்வினை மேற்கொள்ளலாம் இந்த ஆய்வின் முடிவாகும். ஆக, இந்த இயலில் ஆய்வு முடிவு, ஆய்வுக் கருத்துரை, தொடராய்விற்கான பரிந்துரைகள் விளக்கப்பட்டுள்ளன.

## REFERENCES

Zakaria, N. Y. K., Zakaria, S. N., & Azmi, N. E. (2018). Language Learning Strategies Used by Secondary Schools Students in Enhancing Speaking Skills. Creative Education, 9, 2357-2366. https://doi.org/10.4236/ce.2018.914176

Azar, A.S., & Tan, N.H. (2020). The Application of ICT Techs (Mobile-assisted Language Learning, Gamification, and Virtual Reality) in Teaching English for Secondary School Students in Malaysia during COVID-19 Pandemic. Universal Journal of Educational Research, 8, 55-63. https://api.semanticscholar.org/CorpusID:228979926